## Deposition of Witness

(Chapter XXIII Code Of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, THOOTHUKUDI.

**Case No : CC. 942 of 2022**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | Prosecution Witness | : PW.1(LW.1) |
| | Defence Witness | : |
| | Court Witness | : --- |

| | |
|---|---|
| Name | : திரு மோசஸ் பொன்ராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| **Details on the presence of accused** | : Accused is absent. |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of The Oaths Act of 1969 on 26.09.2023

**முதல் விசாரணை:–**

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரி ரமேஷ்குமாரை எனக்கு தெரியும். அவர் எனது மகள் ஏஞ்சலின்ஜெபாவின் முன்னாள் கணவர் ஆவார். கடந்த 9.11.2020 அன்று இரவு 11.00 மணிக்கு கிருஷ்ணராஜபுரம் 6 வது தெருவில் நாங்கள் குடியிருந்து வந்த வீட்டிற்கு ரமேஷ்குமார் வந்து எனது மகளிடம் தகராறு செய்தார். நாங்கள் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று சமாதானபடுத்தி அனுப்பி வைத்தோம். எனினும் இரவு 11.30 மணி அளவில் ரமேஷ்குமார் மீண்டும் எங்களது வீட்டிற்கு வந்து வீட்டின் முன்பு நின்றிருந்த TN 69 AD 5302 என்ற எனது Honda Activa வாகனத்திற்கு தீ வைத்து சேதப்படுத்தினார். நாங்கள் உடனடியாக காவல்துறையினருக்கு தகவல் சொன்னோம். எனினும் காவல்துறையினர் மறுநாள் காலை 7.00 மணிக்கு வந்து விசாரித்தார்கள். நான் காலை 10.00 மணிக்கு காவல்நிலையம் சென்று புகார் அளித்தேன். நான் சொல்ல சொல்ல

அங்கிருந்த காவலர் ஒருவர் எனது புகாரினை எழுதிக்கொண்டார். (அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) இந்த வழக்கு தொடர்பாக காவல்துறையினர் என்னிடம் விசாரணை மேற்கொண்டார்கள்.

**குறுக்கு விசாரணை:–**

குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பில் வாய்ப்பளிக்கப்பட்டது. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன் வராததன் காரணமாக குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

Taken before me in open court and the same was read over to the witness and acknowledged by the witness to be correct.

Judicial Magistrate No III,
Thoothukudi.